வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—நாராயணசாமி

தேதி 31.8.2025 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

இயற்கை பேரிடர்களால் நாடு கடுமையான சோதனைகளை சந்தித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி மனதின் குரல் நிகழ்ச்சியில் தெரிவித்துள்ளார்.

இந்தியாவும், சீனாவும் போட்டியாளர்கள் அல்ல, வளர்ச்சி கூட்டாளிகள் என்றும், வேறுபாடுகள் சச்சரவுகளாக மாறக் கூடாது என்றும் இருநாடுகளும் மீண்டும் வலியுறுத்தி உள்ளன.

இந்தியா விரைவில் உலகின் 3 ஆவது பெரிய பொருளாதார நாடாக மாறும் என்று ரிசர்வ் வங்கியின் ஆளுநர் திரு சஞ்சய் மல்கோத்ரா தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் விநாயகர் சிலைகளை கடலில் கரைக்கும் நிகழ்வு நடைபெற்று வருகிறது.

*மன் கீ பாத்* 1 (18)

பருவ மழை காலத்தில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலநடுக்கம் போன்ற இயற்கை பேரிடர்களால் நாடு கடுமையான சோதனைகளை சந்தித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி வருத்தம்

தெரிவித்துள்ளார். நாட்டின் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வீடுகள், வயல்கள் மற்றும் சாலைகள் அடித்து செல்லப்பட்டதாகவும், மக்களின் வாழ்க்கை பெரும் சங்கடத்தில் சிக்கி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். அவர் இன்று காலை ஆகாஷ்வாணியில் 125 ஆவது மனதின் குரல் நிகழ்ச்சியில் உரையாற்றினார். இந்த துயரமான நேரத்தில் தேசிய பேரிடர் மீட்பு படையினர், பாதுகாப்பு படையினர், தன்னார்வ தொண்டர்கள், மருத்துவர்கள் மற்றும் பொதுமக்கள் என அனைவரும் ஒன்றிணைந்து இரவு-பகலாக மோப்ப நாய்கள் மற்றும் ட்ரோன்கள், கண்காணிப்பு கேமராக்கள் போன்ற நவீன சாதனங்கள் உதவியுடன், மீட்பு மற்றும் நிவாரண பணிகளை மேற்கொண்டனர். இதுபோன்ற பணிகளில் ஈடுபட்டவர்களுக்கு தமது இதயம் கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்வதாக பிரதமர் தமது உரையில் தெரிவித்தார். வெள்ளம் மற்றும் மழை ஆகியவற்றின் அழிவுகளுக்கு இடையே ஜம்மு-காஷ்மீரில் நடந்த இரண்டு சாதனைகளை பிரதமர் தமது உரையில் குறிப்பிட்டார். ஜம்மு-காஷ்மீரின் புல்வாமாவில் முதல் பகல் இரவு கிரிக்கெட் போட்டி நடந்தது

*மன் கீ பாத்* 2 (17)

குறித்தும், ஸ்ரீநகரின் தால் ஏரியில் முதல் கேலோ இண்டியா நீர் விளையாட்டு போட்டி நடைபெற்றது குறித்தும் பிரதமர் பெருமிதம் தெரிவித்தார். இதில், நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து 800 க்கும் அதிகமான விளையாட்டு வீரர்கள் பங்கேற்றனர் என்றும் தெரிவித்தார். இந்த விளையாட்டு போட்டியை நடத்திய ஜம்மு காஷ்மீர் மக்களின்

விருந்தோம்பல் பண்பையும் பிரதமர் பாராட்டினார். ஒரே பாரதம்-உன்னத பாரதம் என்ற உணர்வுக்கு, விளையாட்டுகள் மிகவும் அவசியம் என்றும், நாட்டின் ஒற்றுமையை வளர்க்க விளையாட்டு போட்டிகள் போட்டிகள் முக்கிய பங்கு வகிப்பதாக பிரதமர் குறிப்பிட்டார். நிகழ்ச்சியில் விளையாட்டு போட்டிகளில் பங்கேற்றவர்களுடன் பிரதமர் கலந்துரையாடினார். பிரதமர் திரு நரேந்திர மோடி தமது மனதின் குரல் நிகழ்ச்சியில், யுபிஎஸ்சி தேர்வுகளில் தகுதி பெற்று இறுதிப் பட்டியலில் இடம் பெறாத திறமையான மாணவர்களின் நலனுக்காக பிரதிபா சேது என்ற டிஜிட்டல் தளம் உள்ளதாகவும், இந்த தளம் குடிமைப்பணிகள், மருத்துவம் போன்ற துறைகளில் அனைத்து நிலைகளில் தேர்ச்சி பெற்றும் இறுதிப் பட்டியலில் இடம் பெறாத மாணவர்களின் நலனில் அக்கறை கொண்டுள்ளதாக தெரிவித்தார். இது குறித்து மேலும் பிரதமர் கூறுகையில்

**வாய்ஸ்**

*மன் கீ பாத்* 3 (18)

**வாய்ஸ்**

<u>பிரதிபா சேது போர்ட்டல் என்ற புதிய டிஜிட்டல் தளம் உருவாக்கப்பட்டுள்ளதாக பிரதமர் தெரிவித்தார். இந்த தளம் குடிமைப்பணிகள், பொறியியல் மற்றும் மருத்துவ துறைகளில் அனைத்து நிலைகளிலும் தேர்ச்சி பெற்றும் இறுதிப்பட்டியலில் இடம் பெறாத ஆயிரக்கணக்கான மாணவர்களின் தரவுத் தொகுப்பை கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார். இந்த தளத்தின் மூலம் தனியார்</u>

நிறுவனங்கள் திறமையான மாணவர்களை கண்டறிந்து, வேலையில் அமர்த்திக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார். ஏற்கனவே இந்த தளத்தின் உதவியால் நூற்றுக்கணக்கான மாணவர்கள் வேலை வாய்ப்பை பெற்றுள்ளதாகவும், இது இளைஞர்களுக்கு புதிய நம்பிக்கை அளிப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார். பிரதமர் திரு நரேந்திர மோடி தமது மனதின் குரல் நிகழ்ச்சியில் பல வீடுகளின் கூரைகள் பெரிய கட்டிடங்களின் மேல் பகுதி, அரசு அலுவலகங்கள் போன்றவற்றில் சூரிய தகடு பொருத்தி மின்சக்தியை பெருக்கிக் கொள்ள உதவ வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். சூரிய சக்தியின் உதவியுடன் விவசாய துறையில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்துள்ளதாகவும், விவசாயிகள் தற்போது சூரிய சக்தியின் உதவியுடன் மின் மோட்டார்கள், அரிசி ஆலை போன்றவற்றை இயக்கி வருவதாகவும் பெருமிதம் தெரிவித்தார்.

*ஷாங்காய் உச்சி மாநாடு 1* (17)

இந்தியாவும், சீனாவும் போட்டியாளர்கள் அல்ல, வளர்ச்சி கூட்டாளிகள் என்றும், வேறுபாடுகள் சச்சரவுகளாக மாறக் கூடாது என்றும் பிரதமர் திரு நரேந்திர மோடியும், சீன அதிபர் திரு ஜி ஜிங்பிங்கும் மீண்டும் வலியுறுத்தினர். சீனாவின் தியான்ஜின் நகரில் நடைபெறும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் மாநாட்டில், இருவரும் சந்தித்து பேசினார். அப்போது, இருநாடுகளை சேர்ந்த 280 கோடி மக்களின் நலன்கள் இந்தியாவிற்கும், சீனாவிற்கும் இடையே ஒத்துழைப்புடன் இணைக்கப்பட்டுள்ளதாக பிரதமர் தெரிவித்தார். இது, முழு மனித

குலத்தின் நலனுக்கு வழிவகுக்கும் என்றும் அவர் கூறினார். எல்லை மேலாண்மை தொடர்பாக இருநாடுகளும் ஒப்பந்தம் செய்துள்ளதாகவும் அவர் கூறினார். கைலாஷ் -மானோசரோவர் யாத்திரை மீண்டும் தொடங்கப்பட்டுள்ளதாகவும், இரு நாடுகளுக்கு இடையே நேரடி விமானப் போக்குவரத்து மீண்டும் துவங்கப்பட உள்ளதாகவும் தெரிவித்தார். ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் பிற தலைவர்களுடனும் பிரதமர் இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார். உறுப்பு நாடு தலைவர்கள் மற்றும் பிற தலைவர்களுக்கு இன்றிரவு நடத்தப்படும் வரவேற்பு விருந்திலும் பிரதமர் கலந்து கொள்கிறார். இதுகுறித்த ஒரு செய்தித் தொகுப்பு....

**வாய்ஸ்“**

*ஷாங்காய் உச்சி மாநாடு 2* (10)

**வாய்ஸ்“**

<u>ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு 10 உறுப்பு நாடுகளை கொண்டதாகும். இது கடந்த 2001 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இதில் சீனா, ரஷ்யா, இந்தியா, ஈரான், கஜகஸ்தான், கிர்கிஸ்தான், பாகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் மற்றும் பெலாரஸ் ஆகிய நாடுகள் உள்ளன. பயங்கரவாதம், பிரிவினைவாதம், தீவிரவாதம் ஆகிய 3 தீமைகளை எதிர்கொள்வதே ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் முதன்மை கொள்கைகளாக செயல்படுகிறது. கடந்த 2017 முதல் இந்தியா ஷாங்காய் ஒத்துழைப்பு நாடுகளின் உறுப்பினராக உள்ளது. 2022-23 ஆம் ஆண்டு</u>

காலத்தில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு நாடுகளின் குழு தலைவராக இந்தியா செயல்பட்டது.

*அமித் ஷா* (7)

2 நாள் அரசு முறை பயணமாக குஜராத் சென்றுள்ள மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று அகமதாபாத்தில் ஓகனாஜ் நகர்புற சுகாதார மையத்தை திறந்து வைத்தார். இந்த மையம் மக்களுக்கு மேம்பட்ட சுகாதார சேவைகளை வழங்கும் என்றும் அவர் தெரிவித்தார். தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில், குஜராத்தின் சந்த்லோடியாவில் வந்தே மாதரம் நகர்புற சுகாதார மையத்தையும் அவர் திறந்து வைத்தார். மேலும் ராணிப்பகுதியில் மரம் நடும் நிகழ்ச்சியிலும் அவர் பங்கேற்று மரக்கன்றையும் நட்டார்.

*இந்திய ரிசர்வ் வங்கி*(13)

இந்தியா விரைவில் உலகின் 3 ஆவது பெரிய பொருளாதார நாடாக மாறும் என்று இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர் திரு சஞ்சய் மல்கோத்ரா தெரிவித்துள்ளார். பிரதான் மந்திரி ஜன் தன் யோஜனா திட்டம் நாட்டின் வளர்ச்சியை ஊக்குவிப்பதாக அவர் குறிப்பிட்டார். இந்தூரில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மத்திய அரசும், ரிசர்வ் வங்கியும் கடந்த 11 ஆண்டுகளுக்கு முன்னர் வங்கிகளுடன் இணைந்து ஜன் தன் யோஜனா திட்டத்தை நாடு முழுவதும் தொடங்கி வளர்ச்சிக்கு வழி வகுத்ததாக

தெரிவித்தார். நடப்பு நிதியாண்டில் ஏப்ரல் முதல் ஜூன் வரை உள்ள காலாண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 7.8 சதவிகிதமாக வளர்ச்சி அடைந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார். சேமிப்பு, ஓய்வூதியம், காப்பீடு கடன் மற்றும் பிற சேவைகளை இத்திட்டம் வழங்குவதற்காக 55 கோடி கணக்குகள் தொடங்கப் பட்டுள்ளதாகவும் திரு சஞ்சய் மல்கோத்ரா கூறினார்.

*விநாயகர் சிலை ஊர்வலம்* (18)

நாடு முழுவதும் விநாயகர் சதுர்த்தி விழா கடந்த புதன் கிழமை கொண்டாடப்பட்டது. இதனை ஒட்டி, புதுச்சேரி மாநிலத்தில் பல்வேறு இடங்களில் பிரமாண்ட விநாயகர் சிலைகள் அமைக்கப்பட்டு, மக்கள் பூஜைகள் செய்து வழிபட்டனர். இதற்கிடையே புதுச்சேரியில் விநாயகர் சிலைகளை கடலில் கரைக்கும் நிகழ்வு தற்போது நடைபெற்று வருகிறது. முதற்கட்டமாக கிராமப்புற பகுதிகளில் வைக்கப்பட்ட சிலைகள் கடந்த 29 ஆம் தேதி காலாப்பட், நல்லவாடு மற்றும் காரைக்கால் கடற்கரையில் க்ரேன் மூலம் கரைக்கப்பட்டன. தொடர்ந்து சாரம் அவ்வை திடலில் விநாயகர் சதுர்த்தி விழா பேரவை கமிட்டி சார்பில் அமைக்கப்பட்ட சிலைகள் இன்று கடலில் கரைக்கும் நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. இன்று மதியம் 1.30 மணிமுதல் சாரம், முத்தியால்பேட்டை, லாஸ்பேட்டை, காட்டேரிக்குப்பம் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் வைக்கப்பட்டிருந்த விநாயகர் சிலைகள், நகரின் முக்கிய வீதிகள் வழியாக

ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு கடலில் கரைக்கப்பட்டன. இதனை ஒட்டி புதுச்சேரியில் இன்று மதியம் 12 மணி முதல் மாலை 5 மணி வரை போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டது. விநாயகர் சிலை ஊர்வலம் நடைபெறும் பகுதிகளில் மதுபானக்கடைகள், உணவகங்களை மூடவும் காவல் துறை உத்தரவிட்டிருந்தது.

*கவர்னர் சைக்கிள் பேரணி* (9)

தேசிய விளையாட்டு தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி, புதுச்சேரி அரசு விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரங்கள் துறை சார்பில், புதுச்சேரி கடற்கரை காந்தி திடலில் நடைபெற்ற நிகழ்ச்சியில், துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் கலந்து கொண்டு இளைஞர்களின் சைக்கிள் பயணத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார். முன்னதாக, அனைவரும் தேசிய விளையாட்டு தின உறுதி மொழியை எடுத்துக் கொண்டனர். நிகழ்ச்சியில், சட்டப்பேரவை தலைவர் திரு செல்வம், மாநில உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம், மக்களவை உறுப்பினர் திரு செல்வ கணபதி, தலைமை செயலர் திரு சரத் சவுகான் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

*வானிலை* (6)

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் அடுத்த

2 நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. ஓரிரு இடங்களில் தரைக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக் கூடும் என்றும், ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அஞ்சல் (11)

அமெரிக்காவிற்கு அனுப்பப்படும் கடிதங்கள், ஆவணங்கள் மற்றும் 100 டாலர்கள் வரை மதிப்புடைய பரிசுப் பொருள் போன்றவற்றை அனுப்புவதை மத்திய அரசு நிறுத்தி வைத்துள்ளது. அமெரிக்காவிற்கு அஞ்சல்களை கொண்டு செல்ல போதிய கேரியர்கள் இல்லாதது மற்றும், வரையறுக்கப்பட்ட ஒழுங்கு முறை வழிமுறைகள் போன்றவற்றை கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அஞ்சல் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிலைமைகளை அரசு உன்னிப்பாக கண்காணித்து வருவதாகவும், சேவைகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என்றும் அரசு தெரிவித்துள்ளது. ஏற்கனவே பொருட்களை முன்பதிவு செய்து அனுப்ப முடியாத வாடிக்கையாளர்கள் தபால் கட்டணத்தை திரும்ப பெறலாம் என்றும் அஞ்சல் துறை தெரிவித்துள்ளது.